# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் சரவணவேல் | Father's Name | : | ஆனந்தவேல் |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 44 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1 & A2 are present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.1, Dated 24.02.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1132, நாள் 24.02.2026 ன்படி டாக்டர் சரவணவேல் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:07:39 +0530

தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு K.சதீஷ்குமார் (Assistant Programmer) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவின் துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.2025 அன்று காலை 7.00 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது 29 வயது மதிக்கதக்க ஜெயபிரிதா என்பவர் அவரது சகோதரி அபிராமி என்பவரால் மேல் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவருக்கு ஏற்கனவே மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டிருந்தது. எனக்கு முன்பு நள்ளிரவு 1.15 மணியளவில் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையிலிருந்த டாக்டர் பிரதீப்குமார் என்பவர் ஜெயபிரிதாவிற்கு வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3**. அவர் 07.05.2025 அன்று இரவு 11.00 மணியளவில் தன்னை அடையாளம் தெரிந்த நபர் ஒருவர் அருவாளால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு 3 x 2 x 1 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இடது கை சுண்டு விரலில் இருந்தது. அவரை பரிசோதித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:07:52 +0530

காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச் சான்று **அ.சா.ஆ.4**. அதே சம்பவத்தில் தாக்கப்பட்ட 55 வயதுடைய பவானி என்பவர் மேல் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். எனக்கு முன்பு நள்ளிரவு 2.49 மணியளவில் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையிலிருந்த டாக்டர் பிரதீப்குமார் என்பவர் பவானிக்கு வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5**. அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 5x3x3 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இடது கை கட்டை விரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் நடுவே காணப்பட்டது. 2) 5 செ.மீ. அளவில் தையலிடப்பட்ட காயம் நெற்றியில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களில் முதல் காயம் சாதாரண காயம் எனவும் 2வது காயம் கொடுங்காயம் எனவும் சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச் சான்று **அ.சா.ஆ.6**. அரவிந்த்மோகன் 08.05.2025 அன்று அதிகாலை 4.50 மணிக்கு இறந்து விட்டார் என்ற தகவலை காவல் துறைக்கு 08.05.2025 அன்று காலை 5.30 மணிக்கு என தகவல் கொடுக்கப்பட்டது குறித்து வழங்கப்பட்ட அறிக்கை **அ.சா.ஆ.7**. மேற்சொன்ன காயங்கள்ள அருவாளால் வெட்டப்பட்டால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:07:57 +0530

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

ஜெயபிரிதா என்பவருக்கு விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ல் காயத்தின் வயது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. மன்னார்குடி அரசு மருத்துவமனையில் ஜெயபிரிதா சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான அறிக்கை எதுவும் கோப்பில் இல்லையென்றால் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. அ.சா.ஆ.3 ல் ஜெயபிரிதாவிற்கு ஏற்பட்ட காயம் Lacerated Wound என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அ.சா.ஆ.4 ல் ஜெயபிரிதாவிற்கு ஏற்பட்ட காயம் வெட்டுக் காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி 2 ஆவணங்களிலும் ஏற்பட்ட காயத்தின் தன்மையின் மாறுபாடு குறித்து தற்போது என்னால் சொல்ல முடியாது என்றால் ஒவ்வொரு மருத்துவரும் காயத்தின் தன்மை பற்றி அவரவரது அனுபவத்தின் அடிப்படையில் கருத்து கூறுவார்கள். ஜெயபிரிதாவிற்கு ஏற்பட்ட காயத்தை அவரே ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு என்றால் சாதாரண சூழ்நிலையில் ஏற்படுத்திக்கொள்ள வாய்பில்லை. அசாதாரண நபரால் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புண்டு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:08:02 +0530

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

சட்டம் சார்ந்த முறையில் கொடுங்காயம் என்பதற்கான வரைமுறை எனக்கு தெரியுமென்றால் தெரியும். மருத்துவம் சார்ந்த கொடுங்காயம் என்றால் எனக்கு தெரியும். மருத்துவம் சார்ந்த கொடுங்காயங்கள் எல்லாம் சட்டம் சார்ந்த கொடுங்காயம் ஆகாது என்றால் சரி. இதச பிரிவு 320 வரையறைக்குள் வரவேண்டுமென்றால் சரி. அ.சா.ஆ.6 ல் உள்ள 2 வது காயம் நான் பார்க்கும்போது தையலிடப்பட்ட காயம் என்றால் சரி. இதச பிரிவு 320 க்குள் இந்த காயம் கொடுங்காயமாகாது எனவும் நான் தவறான கருத்துரை வழங்கியுள்ளேன் எனவும் சொன்னால் தவறு. நான் குறிப்பிட்டுள்ள அ.சா.ஆ.4, அ.சா.ஆ.6 ல் சம்பவம் நடந்த நேரம் இரவு 11.00 மணி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. ஒழுங்கற்ற இரு விளிம்புகளும் சீராக இல்லாத காயத்தை கிழிந்த காயமென சட்டம் சார்ந்த மருத்துவத்தில் குறிப்பிடுவோம் என்றால் தவறு. 2 விளிம்புகளும் சீராக உள்ள காயத்தை வெட்டுக்காயம் என குறிப்பிடுவோம் என்றால் சில விதிவிலக்குகள் உண்டு. ஜெயபிரிதாவிற்கு சுண்டு விரலில் ஏற்பட்ட காயம் நீள வாக்கில் இருந்ததா படுக்கை வாக்கில் இருந்ததா என்று அ.சா.ஆ.4 ல் குறிப்பிடவில்லை என்றால் சரி. என்னுடைய

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:08:08 +0530

சாட்சியம் சட்டம் சார்ந்த மருத்துவத்தின் அடிப்படையில் அமையவில்லை எனவும் நான் பிழையாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:08:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.